உங்கள் அபிமான
தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தினதமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 15.07.2026 • மலர் 04 • இதழ்: 196 • புதன்கிழமை • Edition : Nagercoil • 15.07.2026 • Vol : 04 • Issue : 196 • Page : 4 • Rs. 5/-

### தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்திற்கான

# ஒப்பந்த அறிவிப்பை வெளியிட்ட தமிழ்நாடு அரசு

சென்னை, ஜூலை 15

தாய்மாமன்தங்கமோதிரம் திட்டத்திற்கான ஒப்பந்த அறிவிப்பை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.

அறிஞர் அண்ணா பிறந்தநாளான செப்.15ஆம் தேதி தாய்மாமன் தங்கம் மோதிரம் திட்டத்தை முதல்அமைச்சர் விஜய் தொடங்கி வைக்க உள்ளார்.

இந்நிலையில் ஒரு கிராம்தங்கம்ரூ.5,725க்கு கொள்முதல் செய்ய டெண்டர் அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று (ஜூலை 14ம்தேதி) முதல் ஆகஸ்ட் 17ஆம் தேதி வரை டெண்டருக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு கிராம் எடையுள்ள 4,41,667 தங்க மோதிரங்களை வாங்க ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக "தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்" தொடர்பாக தமிழக அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை சார்பில் வெளியிடப்பட்டிருந்த அரசாணையில் கூறப்பட்டிருந்ததாவது:

தமிழ்நாடு முதல்அமைச்சர் விஜய் தலைமையில், வெற்றித் தமிழகம்தொலைநோக்கு திட்டங்களுக்கு (Vetri Thamizhagam vision document) தமிழ்நாடு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதில் மிகவும் முக்கியமான திட்டம் "தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்".

அரசு மருத்துவமனைகளில் பிரசவிக்கும் ஒவ்வொரு குழந்தையையும், மற்றும் பிரசவித்த தாயையும் கவுரவிக்கும் முகமாக "தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்" வடிவமைக்கப்பட்டு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.



தமிழ்நாடு அரசு தாய் சேய் நலனை மேம்படுத்துவதற்கு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவி, இலவச பிரசவம்மற்றும்புதிதாகப் பிறந்த குழந்தை பராமரிப்பு சேவைகள், அவசர மகப்பேறு சிகிச்சை, ஊட்டச்சத்து அளித்தல், பிரசவத்திற்காக மருத்துவமனையை திட்டமிடும் முறை மற்றும் கர்ப்பிணி மற்றும் குழந்தைகள் கூட்டு கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு மென்பொருள் (PICME) உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு இம்முயற்சிகள் மாநிலத்தில் தாய் சேய் நலக் குறியீடுகளை குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுத்தியுள்ளன.

அரசு மருத்துவமனைகளில் பிரசவிக்கும், தமிழ்நாட்டில் நிரந்தரமாக வசிக்கும் குடும்பங்களை சார்ந்த தாய்மார்களின் குழந்தைகளுக்கு தமிழ்நாடு முதல்அமைச்சரின் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின் கீழ் ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்படும்.

தமிழர் பாரம்பரியத்தில், "தாய்மாமன் சீர்" என்ற மரபின்படி, தமிழ்நாடு முதல்அமைச்சர், தாயின் சகோதரர் புதிதாகப் பிறந்த குழந்தையை வரவேற்று வாழ்த்தும் வகையில் தங்கம் உள்ளிட்ட பரிசுகளை வழங்கும் விதமாகவும், தமிழர் பண்பாட்டு மரபை பிரதிபலிக்கும் வகையிலும், அரசு ஒவ்வொரு குழந்தைக்கும் தாய்மாமனின் பங்கை ஏற்று, அன்பும் அக்கறையும் நிறைந்த வரவேற்பின் அடையாளமாக ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்பட உள்ளது.

தமிழ்நாடு அரசின் சுகாதாரச் சேவைகளில் மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தும் நோக்கிலும், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தையின் பிறப்பை நினைவு கூறும் வகையிலும், தாய்மையின் மகிழ்ச்சி மற்றும் முக்கியத்துவத்தை கொண்டாடும் வகையிலும் "தாய்மாமன் தங்க மோதிரத் திட்டம்" *[Thaaimaaman Thanga Mothira Thittam]* செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தை மாநிலத்தில் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் ரூ.755.83 கோடி நிதியை ஒதுக்கீடு செய்கிறது. இத்திட்டற்கான ஒப்பந்த புள்ளிகள் உடனடியாக கோருவதற்கு தமிழ்நாடு முதல்அமைச்சர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

செப்டம்பர் 15ந்தேதி முதல்அமைச்சர் விஜய் தொடங்கி வைக்கிறார்:

இத்திட்டத்தின் கீழ், 22 ஜூன் 2026 முதல் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகள் பயன் பெறுவார்கள். "தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்" பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15, 2026 அன்று தமிழ்நாடு முதல் அமைச்சரால் துவக்கி வைக்கப்படும். இவ்வாறு அந்த அறிவிப்பில் கூறப்பட்டிருந்தது.

### சிந்தலக்கரை வெட்காளியம்மன் கோவிலில்

## ஆனி மாத மகா வேள்வி பூஜையை முன்னிட்டு 108 லிட்டர் பாலாபிஷேகம் மற்றும் 308 கிலோ எலுமிச்சம் மாலை அணிவித்து சிறப்பு பூஜை



விளாத்திகுளம் ஜூலை 15

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள சிந்தலக்கரை ஸ்ரீ வெட்காளியம்மன் காளிபராசக்தி வசித்த பீடத்தில் ஆனி மாத வேள்வி பூஜை சக்தி மாலை இருமுடி விழா மகாயாகம் நடைபெற்றது.வேள்வி விழா மகாயாக சாலையில் நம் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் பழ வகைகள்,உணவு தானியங்கள், உடைகள்,குழந்தை தொட்டில், கல்உரல், அம்மி, மாங்கல்யம், உணவு ஆகியவற்றை நடைபெற்ற மகாயாக சாலையில் செலுத்தி வழிபாடு நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து 42 அடி உயரம் கொண்ட வெட்காளியம்மனுக்கு 108 லிட்டர் பாலாபிஷேகம், மஞ்சள் அபிஷேகம் மற்றும் 308 கிலோ எலுமிச்சம் மாலை அணிவித்து சிறப்புபூஜைமற்றும் தீபாராதனை நடைபெற்றது. ஆனி மாத இருமுடி விழாவிற்கு வருட வருடம் பக்தர்கள்கூட்டம் அதிகமாக வருவதால்,

இறுதி கட்டமாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து சுமார் 1000க்கும் மேற்பட்ட விரதம் இருந்து காப்பு கட்டி இருமுடி கட்டியும் வெட்காளியம்மன்வேடம்அணிந்தும் வந்த பக்தர்கள் பம்பை வாத்தியத்துடன் ஆரவார நடனத்துடன் தங்களின் நேர்த்திக்கடனை செலுத்தினர்.



## வரலாற்று சின்னமான பத்மநாபபுரம் அரண்மனை சுற்றுச்சுவர் புதுப்பிக்கப்படும்: ஆய்வுக்கு பின் அமைச்சர் தகவல்

நாகர்கோவில் ஜூலை 15

கன்னியாகுமரி மாவட்டத்தில் வரலாற்று சிறப்புமிக்க பத்மநாபபுரம் அரண்மனை, முற்காலத்திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் தலைநகராக விளங்கிய பெருமையுடையது. இந்த அரண்மனையைச் சுற்றியுள்ள கோட்டைச் சுவர்கள் மற்றும் சுற்றுச்சுவர்கள் காலப்போக்கில் இயற்கைச் சீற்றங்களினாலும், போதிய பராமரிப்பு இல்லாததாலும் ஆங்காங்கே சேதமடைந்திருக்கின்றன. பழமை மாறாமல் பழுதடைந்த சுற்றுச்சுவர்களை புனரமைக்க வேண்டும் என பொதுமக்கள் தொடர் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று சுற்றுலா துறை அமைச்சர் ராஜேஷ்குமார் அரண்மனையை ஆய்வு செய்தார். பின்னர்அவர்கூறியதாவது: இந்த கோட்டைன சுற்று சுவர்களை சீரமைக்க

தொல்லியல் துறையினரை திட்ட மதிப்பீடு தயாரிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத் தலைமுறையினரும் கோட்டையை பற்றி தெரிந்து கொள்ளும் வகையில் அரண்மனையின் பாரம்பரிய கட்டுமான அமைப்பில் பயன்படுத்தப்பட்டஅதேகலவைகளைப் பயன்படுத்தி,

ஒரு துளிகூட அதன் பழமை மாறமல் இந்தச் சுற்றுச்சுவர் புதுப்பிக்கப்படும். சிதிலமடைந்த பகுதிகளைக் கண்டறிந்து, கவனத்துடன்சீரமைக்க விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். என அமைச்சர் கூறினார்.

நடைபெற்ற ஆய்வில் மாவட்ட ஆட்சியர் பிரதாப், சட்டமன்ற தொகுதி உறுப்பினர் செல்லசாமி, பத்மநாபபுரம் வருவாய் கோட்டாட்சியர் (பொ) புஷ்பாதேவி, கல்குளம் வட்டாட்சியர்ராஜேஷ், பத்மநாபபுரம் நகராட்சி ஆணையர் கண்மணி, தொல்லியல் துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

## குட்கா வழக்கில் கைதான வாலிபர் திடீர் சாவு நாகர்கோவில் சிறையில் எஸ் பி விசாரணை

### வெளிமாவட்ட மருத்துவ குழுவினர் பிரேத பரிசோதனை செய்தனர்

நாகர்கோவில், ஜூலை. 15

சாமிதோப்பு அருகே உள்ள வடக்கு தாமரைகுளம், ஈத்தங்காடு பகுதி சேர்ந்தவர் சபரிவர்மன் (33).இவர் தனது வீட்டின் அருகே பெட்டி கடை நடத்தி வந்தார். இவருக்கு ஆனந்த வல்லி என்ற மனைவியும், 5 வயதில் ஒரு மகனும் உள்ளனர். கடந்த 9ம் தேதி சபரிவர்மன் கடையில் போலீசார் திடீர் சோதனை நடத்தினர். அப்போது அவரது கடையில் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் இருந்ததை கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பாக சபரி வர்மனை போலீசார் கைது செய்து நாகர்கோவில் ஜெயிலில் அடைத்தனர். ஜெயிலில் விசாரணை கைதியாக அடைக்கப்பட்டிருந்த சபரி வர்மன் நேற்று முன்தினம் காலை திடீரென மயங்கி விழுந்தார். உடனடியாக சிறை துறையினர் அவரை குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை கொண்டு சென்ற போது அங்கு பரிசோதித்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தகவல் தெரிவித்தனர்.

சபரி வர்மன் இறந்த தகவல் குடும்பத்தாருக்கு தெரிவிக்கப்பட்டு, இதை அடுத்து அவர்கள் குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை முன் குவிந்தனர். அவரது மரணத்தின் சந்தகை இருப்பதாகவும், உடலை பார்க்க அனுமதிக்க வேண்டும் என்று சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களிடம் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஸ்டாலின் பேச்சு வார்த்தை நடத்தி பின்னர் மறியல் போராட்டம் கைவிடப்பட்டது.

சபரிவர்மனின் தாய் மற்றும் மனைவியை மட்டும் சபரி வர்மனின் உடலை பார்க்க அனுமதிக்க முடிவு எடுக்கப்பட்டு, பிணவறைக்குள் வைக்கப்பட்டுள்ள சபரி வர்மன் உடலை பார்த்தனர். பின்பு வெளியே வந்தவர்கள் சபரி வர்மனின் உடலில் தாக்கியதற்கான காயங்கள் இருப்பதாக தெரிவித்தனர்.

இந்த விவகாரம் குறித்து சபரி வர்மனின் குடும்பத்தினர் இடம் நீதிபதி சத்தியமூர்த்தி விசாரணை நடத்தினார். அவரது உடலில் காயங்கள் இருப்பதாக குடும்பத்தினர் கூறியதால், காயங்கள் ஏதும் உள்ளதா? என்பதை கண்டுபிடிக்க எக்ஸ்ரே எடுக்க முடிவு செய்யப்பட்டு, நேற்று முன்தனம் இரவு எக்ஸ்ரே எடுக்கப்பட்டது.

அதன் பிறகு பின்னர் நேற்று நீதிபதி சத்யமூர்த்தி முன்னிலையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. இதற்காக நெல்லை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களை சேர்ந்த மருத்துவர்கள் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் சபரி வர்மனின் உடலை பரிசோதனை செய்தனர்.

இதற்கிடையில் சவரி வர்மனின் சாவு குறைத்து விசாரணை நடத்துவதற்காக குமரி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஸ்டாலின் நாகர்கோவில் சிறைச்சாலைக்கு நேற்று சென்றார். அங்கு சிறை காவலர்கள் மற்றும் சக கைதிகளிடம் விசாரணை நடத்தினார்.

இதற்கிடையில் பிரேத பரிசோதனை முடிவுக்கு பின்னர் சபரி வர்மன் உடலில் காயங்கள் இருப்பதாக உறுதி செய்யப்பட்டதாக தெரிய வருகிறது. இதன் சபாரி வர்மன் உறவினர்கள் அவரது உடலை பெற்றுக் கொள்ளவில்லை. பெற்றுக்கொள்ளாமல் அங்கு மீண்டும் போராட்டம் நடத்தினர். அந்த பகுதியில் போலீசார் மீண்டும் குவிக்கப்பட்டனர்.

இதற்கு இடையில் பிரேத பரிசோதனை முடிந்தவுடன் நீதிபதி சத்தியமூர்த்தி நேரடியாக சிறைச்சாலையில் சென்று விசாரணை நடத்தினார்.

## வலம்புரிவிளை குப்பை கிடங்கில் மீண்டும் பயங்கர தீ விபத்து: தீயை அணைக்கும் பணியில் தீயணைப்பு வீரர்கள்

நாகர்கோவில், ஜூலை.15

நாகர்கோவில் மாநகராட்சி பகுதியில் சேகரிக்கப்படும் குப்பைகள் வலம்புரி விளை குப்பை கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. அங்கு மலை போல் குப்பைகள் தேங்கி உள்ளது. இவைகளை பயோமைனிங் முறையில் அகற்றப்பட்டு வந்தது. ஆனால் தற்போது அந்த திட்டம் நிறுத்தப்பட்டு மீண்டும் டெண்டர் போடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது.

இதனை தவிர மாநகர பகுதியில் நுண்ணுயிரி செயலாக்க மையங்கள் மூலம் குப்பைகள் உரமாக்கப்பட்டு வருகிறது. இந்த குப்பை கிடங்கில் அடிக்கடி தீ விபத்து ஏற்படுவது தொடர் கதையாக நடந்து வருகிறது. இந்த நிலையில் நேற்று அதிகாலை சுமார் 2 மணியளவில் வலம்புரி விளை குப்பை கிடங்கில் மீண்டும் தீ விபத்து ஏற்பட்டது. உடனே மாநகராட்சி ஊழியர்கள் தீயணைக்கும் பணியில் ஈடுபட்டனர். காற்று வேகமாக வீசியதால் தீயின் வேகம் அதிகரித்தது.



இதனால் தீயை கட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. இதனை தொடர்ந்து நாகர்கோவில் தீயணைப்புநிலையத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டது. மாவட்ட தீயணைப்பு அதிகாரி சத்திய குமார் தலைமையில 60 தீயணைப்பு வீரர்கள் தீயணைக்கும் பணியை தொடங்கினர். நாகர்கோவில் தீயணைப்பு நிலையத்திலிருந்து 2 தீயணைப்பு வாகனம் மற்றும் குழித்துறை, திங்கள் நகர், ராஜாக்கமங்கலம் ஆகிய தீயணைப்பு நிலையத்திலிருந்து தலா ஒரு வாகனம் என மொத்தம் 5 தீயணைப்பு வாகனங்கள் மூலம் தீ அணைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

குப்பை கிடங்கில் தீப்பிடித்ததால் கரும்புவை அந்த பகுதி முழுவதும் சூழ்ந்துள்ளது. இதனால் குப்பை கிடங்கை சுற்றியுள்ள பீச் ரோடு, இருளப்பபுரம், வட்டவிளை, வைத்தியநாதபுரம் பகுதி மக்கள் பெரும் அவதி அடைந்துள்ளனர். குப்பை கிடங்கில் தீயை கட்டுப்படுத்த 3 நாட்கள் ஆகும் என தீயணைப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். குப்பை கிடங்கு பிடித்த தகவல் அறிந்ததும் தொகுதி எம் எல்ஏ ஆஸ்டின், நாகர்கோவில் மேயர் (பொறுப்பு) மேரி பிரின்சி ஆகியோர் நேரடியாக சென்று அந்த இடத்தை பார்வையிட்டனர்.

## பாரத கலாச்சார பேரவை சார்பில் சாதனையாளர் விருது வழங்கும் விழா

மார்த்தாண்டம், ஜூலை.15

பாரதக் கலாச்சாரப் பேரவையின் சாதனையாளர் விருது வழங்கு விழா மார்த்தாண்டம், வர்த்தக சங்க கட்டடத்தில் வைத்து நடைபெற்றது. இவ்விழாவிற்கு பேரவைத் தலைவர் பாஸ்கரன் தலைமை தாங்கினார்.

இவ்விழாவில் ஆன்மீகம், இலக்கியம், சமூகம் சார்ந்து தொண்டாற்றும் புலவர் கு.இரவீந்திரன், பேராசிரியர் செ. சஜீவ் ஆகியோருக்கு சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் துணைத் தலைவர் ரெவிந்திரன் அனைவரையும் வரவேற்றார். இந்திய மருத்துவச் சங்கத்தின் முன்னாள் தேசிய தலைவர் டாக்டர் விஜயகுமார், மாநில பெற்றோர் ஆசிரியர்கழக துணைத் தலைவர் சிந்து




குமார், பணிநிறைதுணை வட்டாட்சியர் சிகாமணி, எழுத்தாளர் குமார செல்வா, பைங்குளம் வாசகர் வட்ட தலைவர் முருகன், குமரி அறிவியல் பேரவை அமைப்பாளர் முள்ளஞ்சேரி மு. வேலையன் உள்ளிட்ட பலர் வாழ்த்திப் பேசினர். தமிழமுதம் வானொலி இயக்குநர் கீழப்பாவூர் சண்முகையா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சாதனையாளர்களுக்கு சாதனையாளர் விருது வழங்கி விழாப் பேருரை நிகழ்த்தி னார். விருதாளர்களின் ஏற்புரையோடு நிகழ்வு நிறைவடை ந்தது.

பேரவை உறுப்பினர் சிவப்பிரசாத் அனைவருக்கும் நன்றி கூறினார். நிகழ்ச்சியை மாலன்விளை மகேஸ்வரி தொகுத்து வழங்கினார்.

நிகழ்வில் திரளானோர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, நடைபெற்ற தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் 2026 ல் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சியை சிறப்பாக மேற்கொண்ட தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் .த.மஞ்சுளா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) .உ.முருகேசன், தனி வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மை) . வெங்கடேசன், தேர்தல் விழிப்புணர்வு ஒருங்கிணைப்பாளர் .புவனேஸ்வரி உள்ளிட்ட பலர் உள்ளனர்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது, மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன், பொதுமக்களிடமிருந்து கோரிக் மனுக்களைப் பெற்றுக்கொண்டார்.

### இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் தூத்துக்குடி மாவட்டக்குழு சார்பில்

# மாவட்ட ஆட்சியர், மேயரிடம் மனு



தூத்துக்குடி, ஜுலை 15

தூத்துக்குடி மாநகராட்சி 58 வது வார்டுக்கு உட்பட்ட முள்ளக்காடு ராஜீவ் நகர் பகுதியில் உள்ள குளமானது பல ஆண்டுகளாளசரியாகதூர்வாரிபராமரிக்கபடவில்லை. இதனால் குளத்தை சுற்றி கருவேல மரங்கள் வளர்ந்துஉள்ளது. மேலும் குளத்தில்

உப்பள கழிவுநீர், வாறுகால் கழிவுநீர் ஆகியவை கழக்கப்படுவதால் மக்கள்பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே மாநகராட்சி நிர்வாகம் குளத்தை முழுமையாக தூர்வார வேண்டும். அதே போல் குளத்தைச்சுற்றி பாதுகாப்பு வளையம் மற்றும் நடைமேடை அமைத்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என இன்று இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் தூத்துக்குடி மாவட்டக்குழு சார்பில் மாவட்ட ஆட்சியர் அவர்களிடமும் மாநகராட்சி மேயர் பி. ஜெகன் பெரியசாமி அவர்களிடமும் நேரில் சென்று மனு அளிக்கப்பட்டது இதில் மாநகராட்சி மேயர் பி ஜெகன் பெரியசாமி அவர்கள் உடனடியாக குளத்தை ஆய்வு செய்து கூறுவாரி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவோம் என்று வாக்குறுதி அளித்தார். இதில் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் மாவட்ட தலைவர் தோழர்.ஜெநேசமணிமற்றும் மாவட்ட துணைச் செயலாளர் தோழர். மாரிச்செல்வம் ராஜிவ் நகர் கிளை உறுப்பினர் தோழர்காசிராஜன்கலந்து கொண்டனர்.

### தேன்கனிக்கோட்டை ஹஸ்ரத் யாரப் தர்காவில்

# சந்தனக்குட யானை மேல் ஊர்வலம் இலட்சக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்பு



ஒசூர், ஜூலை,15 :

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் தேன்கனிக் கோட்டையில் பிரபலமான ஹஸ்ரத் யாரப் தர்காவில் யானை மேல் சந்தனக்குட ஊர்வலம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு பல்வேறு கட்சி நிர்வாகிகள், பிரபல தொழிலதிபர்கள், ஊர் முக்கியஸ்தர்கள்எனபலர் இந்த விழாவில் கலந்துக் கொண்டு இவ்விழாவை சிறப்பித்தனர். மற்றும் இந்த விழாவில் மூன்று நாட்களும் தொடர்ந்து அன்னதானம் நடைபெற உள்ளது.இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, கேரளா, மகாராஷ்டிரா, மற்றும் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் இருந்து சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேல் பொது மக்கள் கலந்துக் கொண்டனர்.

இந்த விழாவிற்கு வருகைப் புரிந்த அனைவரையும் தேன்கனிக்கோட்டை எஸ்.ஏ.டி.முஜாமில் பாஷா

ஹஸ்ரத் யாரப் தர்கா முத்தவல்லி (தலைவர்) மற்றும் செயலாளர் A.மஹபூப்கான்மற்றும் கமிட்டி உறுப்பினர்கள் S.A.T.முதாசீர் பாஷா,R. தில்லு ஷெரீப்,H.B.கலிம் பேக்,சையத் அப்சல்,முஹம்மத் ஜாபர் ஷெரிப், M.சையத்பாசில்,முஹம்மத்து குத்பத்தீன், ஷேக், முஹமத் சுல்தான்,அவர்கள் வருகைப்புரிந்து சிறப்பு விருந்தினர்களுக்கு பொன்னாடைப் போர்த்தி பூ மாலை அணிவித்து மரியாதை செய்தனர். இந்த நிகழ்ச்சிக்கு தேன்கனிக் கோட்டை காவல் துணை கண்காணிப்பாளர் ஆனந்தராஜ் தலைமையில், தேன்கனிக்கோட்டை காவல் ஆய்வாளர் சாவித்திரி

முன்னிலையில், தேன்கனிக்கோட்டை காவல் உதவி ஆய்வாளர்நாகராஜ் மேற்பார்வையில் காவல் துறையினர் சிறப்பாக பாதுகாப்பு வழங்கப்பட்டது, தர்கா கமிட்டி நிர்வாகிகள் பொதுமக்கள் பாதுகாப்பு வழங்கப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு நன்றி கூறினார்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில்

# 43 சேமிப்பு கிடங்குகள் தயார், 1.50 லட்சம் டன் நெல் சேமிக்க இட வசதி

## குறுவை , சம்பா பருவத்தில் 8.81 லட்சம் டன் முதல் கொள்முதல்

தஞ்சாவூர் ஜூலை 15

தஞ்சாவூர் மாவட்டத்தில் 43 சேமிப்பு கிடங்குகள் தயார் நிலையிலும், 1.50 லட்சம் டன் சேமிக்க இட வசதி யும் உள்ளது .குறுவை, சம்பா பருவத்தில் 8.81 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என தஞ்சாவூரு மாவட்ட கலெக்டர் தெரிவித்துள்ளார்

இதுகுறித்து அவர் வெளியிட்டு ள்ள செய்தி குறிப்பில் கூறியிருப் பதாவது

தஞ்சாவூர் மாவட்டத்தில் 202526 ஆம் ஆண்டு பருவத்தில் முடிவுற்ற குறுவை, சம்பா பருவத்தில் மொத்தம்8. 81 லட்சம் டன் நெல் கொள்முத ல் செய்யப்பட்டுள்ளது .கடந்த மே மாதம் 15 ஆம் தேதி முதல் கோடை முன் பட்ட குறுவை நெல் கொள் முதல் தொடங்கப்பட்டு, 403 நேரடி நெல் கொள்முதல் நிலைய ங்கள் செயல்பட்டு வருகின்றன. விவசா யிகளின் கோரிக்கையை அடிப்ப டையிலே மேலும் 40 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க ப்பட உள்ளன .இது வரை 1.52 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது .இவற்றில் 1.06 லட்சம் டன் நெல் உடனுக்குடன் இயக்கம் செய்யப்பட்டு கிடங்குகளுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது மேலும் 1.50 லட்சம் டன் நெல் கூடு தலாக கொள்முதல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது தற்போ து நாள் ஒன்றுக்கு சராசரியாக 6 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது

நெல் கொள்முதல் மற்றும் இயக் கப் பணிகளை விரைவுப் படுத்தும் வகையில், தஞ்சாவூர் மாவட்டத்தில் 43 இடங்களில் 5.72 லட்சம் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்குகள் தயார் நிலை யில் செயல்பட்டு வருகிறது .இந்த கிடங்குகளில் சுமார் 2000 பணியா ர்கள் பணியாற்றி வருகின்றனர் தினமும் 500 முதல் 600 லாரிகள் மூலம் நெல் இயக்கம் மேற்கொள்ள ப்பட்டு வருகிறது

தஞ்சாவூர் மண்டலத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு ரயில் மூலம் நெல் இயக்கத்தை துரிதப் படுத்த மாவட்ட நிர்வாகத்தின் கோரிக்கையின் அடிப்படையில் இந்த மாதம் 42,000 டன் நெல் இயக் குவதற்கான கூடுதல் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது .மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 46 அரவை முகவர்கள் மூலம் 3000 டன் நெல் அரவை செய்யப்பட்டு வருகிறது. மேலும் தினமும் 2000 டன் முதல் 3000 டன் நெல் கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டு வருகிறது

மாவட்டத்திலுள்ள 12 திறந்த வெளி நெல் சேமிப்பு மையங்களில் நெல் அட்டிகள் மழையில் நனையாதவாறு தரமான தார்பாய்களால் முழுமையாக மூடப்பட்டுள்ளது மழைநீர் தேங்காமல் இருக்க வடிகால் வசதிகள் செய்யப்பட்டு ள்ளதுடன் ,நெல் அட்டிகள் சரியாமல் பாதுகாப்பாக அடுக்கப்பட்டுள் ளது உறுதி செய்ய தாசிதார் தலை மையிலான கண்காணிப்பு குழுக் கள் அமைக்கப்பட்டு தீவிர கண் காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது .விவசாயிகள் கொண்டு வரும் நெல்மணிகள் தாமதம் இன்றி கொள்முதல் செய்யப்பட்டு உடனுக்குடன் இயக்கம் செய்யப் படுவது போதுமான தேவையான போதிய சேமிப்பு இட வசதி தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது நெல் கொள்முதல் பணிகள் எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் அனைத்து நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்டவாறு அதில் கூறப்பட்டு ள்ளது



# தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தில் 18 உதவி கலெக்டர்களுக்கு பயிற்சி

தஞ்சாவூர் ஜூலை 15

தமிழ்நாடு அரசு நடத்தும் தமிழ்நாடு தர்சன் நிகழ்ச்சியின்ஒரு பகுதியாக குடிமைப்பணித்தேர்வில் தேர்ச்சி பெற்று தகுதிகாண் பருவப் பயிற்சி கள் உள்ள 2022 2023 ஆம் ஆண்டு களுக்கான18 உதவி கலெக்டர்களுக்கு தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழ கத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது

இரண்டு நாட்கள் நடந்த இந்த பயிற்சிக்கு பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பொறுப்புக் குழு உறுப்பினர் பாரத ஜோதி தலைமை தாங்கினார் .பயிற்சியில் பங்கேற்ற உதவி கலெக்டர்களுக்கு தமிழ்ப் பல்கலைக்கழக பதிப்புத்துறை வெளியிட்டுள்ள சட்ட தமிழ் அகரா தி நூலை பல்கலைக்கழக பதிவாள ர் பொறுப்பு பன்னீர் செல்வம் வழங்கினார் .இப்பயிற்சியின் இயக்குனரும் ,இந்திய மொழிகள் மற்றும் ஒரு ஒப்பிலக்கிய பள்ளி பேராசிரியரும் , துறைத்தலைவரு மான கவிதா அனைவரையும் வரவேற்றார். நிறைவாக பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அலுவலர் பொறுப்பு மற்றும் மொழி பெயர்ப்புத் துறை தலைவர் முருகன் நன்றி கூறினார்


தினதமிழ்

நிருபர்கள் தேவை

“வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக”


தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தினதமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

தகுதிகள்

குற்ற வழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்.

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200, 70102 64701



### 31 ந் தேதி தொடங்குகிறது

# ஈரோட்டில் 12 நாட்கள் நடக்கும் புத்தக திருவிழா

ஈரோடு ஜூலை 15

ஈரோடு சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மைதானத்தில் ஈரோடு புத்தகத் திருவிழா மாவட்ட நிர்வாகம் மற்றும் மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் வருகிற 31 ந் தேதி முதல் 12 நாட்கள் நடக்கிறது. இதை யொட்டி கலெக்டர் கந்தசாமி தலைமையில் ஆலோசனை கூட்டம் ஈரோடு ஆட்சியர் அலுவலகத்தில் நடந்தது. அப்போது மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது

தமிழ்நாடு முதலமைச்சர் புத்தக வாசிப்பை பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்களிடையே ஊக்குவிக்க வேண்டுமென்ற உன்னத நோக்கத்தில் மாவட்டந் தோறும் புத்தககண்காட்சி ஏற்பாடு செய்து நடத்திட நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். இப் புத்தககண்காட்சி அமைப்பதால் நூல்கள் பொதுமக்களை சென்றடைகிறது. நூல்கள் எழுதுபவர்களுக்கு அவர்களது படைப்புகளை காட்சிப்படுத்தி விற்பனை செய்திட வாய்ப்பாக அமைகிறது. புத்தக்கண்காட்சி என்பது கலாச்சாரத்தை மாற்றியமைக்க கூடிய அம்சம் ஆகும். இந்த ஈரோடு புத்தகத் திருவிழாவில் 200க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட உள்ளது. ஒவ்வொன்றும் தனிச்சிறப்பு வாய்ந்த அரங்குகளாக வெளிநாடுகளிலிருந்தும், பிற மாநிலங்களிலிருந்தும் புகழ்மிக்க பதிப்பாளர்கள் வருகைதந்து அரங்குகளை அமைக்க உள்ளார்கள். மேலும், இப்புத்தகத்திருவிழாவில் புத்தகங்களுக்கு சிறப்பு தள்ளுபடி வழங்கப்பட உள்ளது. காலை 11.00 மணி முதல் இரவு 9.30 வரை கண்காட்சி நடைபெற உள்ளது. இக்கண்காட்சியில் தலைசிறந்த சொற்பொழிவாளர்கள். அறிஞர்கள் கருத்துரை வழங்க உள்ளார்கள். இதில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள் பெருமளவில் பங்கேற்கவும், புத்தக திருவிழாவை சிறப்பாக நடத்திட அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும் . இவ்வாறு அவர் கூறினார் . கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார். ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித்ஜெயின்உட்படதுறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு ஆட்சியர் தலைமையில் உலக நுகர்வோர் உரிமைகள் தின விழா




ஈரோடு ஜூலை 15

ஈரோடு மாவட்டம் பெருந்துறை, ஈங்கூர், இந்துஸ்தான் அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரியில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில், உலக நுகர்வோர் உரிமைகள் தின விழா மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. அப்போது மாவட்ட ஆட்சித்தலைவர் பேசியதாவது உலக நுகர்வோர் உரிமைகள் தினம் என்பது நுகர்வோரின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும்முக்கியமான நாளாகும். எந்தவொரு பொருளையும் வாங்கும் முன் அதன் தரம், உற்பத்தி மற்றும் காலாவதி தேதி, தயாரிப்பு நிறுவனத்தின் விவரங்கள் உள்ளிட்டவற்றை கட்டாயம் சரிபார்க்க வேண்டும். பொருட்களை வாங்கும் போது ரசீது பெற்றுக் கொள்வதையும், உத்தரவாத அட்டைகளை பாதுகாப்பாக பொதுமக்கள் வைத்திருக்க வேண்டும். சேவைக் குறைபாடு அல்லது பொருள் குறைபாடு ஏற்பட்டால் நுகர்வோர் நீதிமன்றங்கள் மற்றும் துறைவாரியான குறைதீர்ப்பு அமைப்புகள் மூலம் உரிய நிவாரணம் பெற முடியும் என்பதையும் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். பள்ளி, கல்லூரி மாணவர்கள் நுகர்வோர் உரிமைகள் குறித்த விழிப்புணர்வைதங்களதுகுடும்பத்தினருக்கும் சமூகத்திற்கும் எடுத்துச் செல்ல வேண்டும். கல்வி நிறுவனங்களில் நுகர்வோர் உரிமைகள் தொடர்பான விவாதங்கள். கருத்தரங்குகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும். விழிப்புணர்வுள்ள நுகர்வோராக ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும் .இவ்வாறு அவர் கூறினார்

# காமராசரின் பிறந்தநாள் தின விழா



தூத்துக்குடி, ஜூலை 15

பெரும்தலைவரும்தமிழகத்தின்முன்னாள்முதல் வருமான காமராசரின் பிறந்தநாள் தின விழாவினை சிறப்பிக்கும் வகையில்புதுக்கோட்டை அருகே உள்ள தங்கம்மாள் புரத்தில் அமைந்துள்ள ஸ்ரீமன் நாராயணசாமி சமுதாய நல கூடத்தில் தமிழக வெற்றி கழகம் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி தெற்கு ஒன்றியம் சார்பில் இலவச மருத்துவ பரிசோதனை முகாம் நடைபெற்றது. இதில் கண் நீர் அழுத்த நோய், எலும்பு மருத்துவம், பல் சிகிச்சை ஆகியவை குறித்த விழிப்புணர்வு மற்றும் சிகிச்சைகள் பொதுமக்களுக்கு வழங்க பட்டன. இந்த முகாமில் தமிழ் நாடு சிறுகுறு மற்றும் நடுத்தர தொழில் நுட்ப துறை அமைச்சர் பெ. மதன் ராஜாசிறப்புவிருந்தினராக கலந்து கொண்டு பார்வையிட்டார். அப்போதுஅவர் மக்களை சந்தித்து உரையாடினார். மேலும் நிகழ்வில் தூத்துக்குடி மாவட்ட தவெக தெற்கு ஒன்றிய செயலாளர் விண்ணரசி எஸ். எம் குழந்தை ராஜா, எஸ். டி. ஆர். விஜயசீலன், சேர்வைகாரன் மடம் முன்னாள் பஞ்சாயத்து தலைவர்கள் ஜெ. ஞான சேகர், ஜி. ஜெபக்கனி,தவெக மருத்துவ முகாம் ஒருங்கிணைப்பாளர் ஜி. பிளெஸ்ஸிங் சாமுவேல், ராமசந்திராபுரம்இணைசெயலாளர் ஜில்லா சுரேஷ், கிளை செயலாளர்கள் பொன்சுந்தர்,அருள்செல்வன், இயேசுராஜ், மாரியப்பான், புதுக்கோட்டை மரம் வரம் அறக்கட்டளை உறுப்பினர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். முகாமில் 47 பயனாளிகளுக்கு மருத்துவ ஆலோசனை மற்றும் பரிசோதனை நடைபெற்றது.

## அவதூறு புகார்

# ரூ.50 கோடி இழப்பீடு கேட்டு நந்தகுமாருக்கு அன்பில் மகேஷ் பொய்யாமொழி நோட்டீஸ்



திருச்சி, ஜூலை 15

தனியார் பள்ளிகள் கூட்டமைப்பின் நிர்வாகி நந்தகுமாருக்கு ரூ.50 கோடி இழப்பீடு கேட்டு, முன்னாள் பள்ளிக் கல்வித்துறை அமைச்சரும், திருச்சி தெற்கு மாவட்ட திமுக செயலாளருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி வக்கீல் நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

திமுக ஆட்சிப் பொறுப்பில் இருந்த சமயத்தில், தனியார் பள்ளிகளுக்கான தகுதி அங்கீகாரத்தை (Recognition) வழங்குவதற்கு பெருமளவில் லஞ்சம் பெறப்பட்டதாக நந்தகுமார் அண்மையில் குற்றம் சாட்டியிருந்தார். இது தொடர்பாக பல்வேறு முன்னணி ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தள பக்கங்களுக்கு அவர் தொடர்ச்சியாக நேர்காணல்களையும் அளித்திருந்தார்.

எவ்வித ஆதாரமும் இன்றி, தன் மீதும் அரசு மீதும் அபாண்டமாகப் பழிசுமத்தி, நற்பெயருக்குதிட்டமிட்டு அவதூறு பரப்பும் நோக்கில் நந்தகுமார் செயல்படுவதாக அன்பில் மகேஸ் தரப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இத்தகைய அவதூறுகளைச் சட்டரீதியாக எதிர்கொள்ள முடிவெடுத்துள்ள அவர், திமுக நாடாளுமன்ற உறுப்பினரும் மூத்த வழக்கறிஞருமான பி. வில்சன் மூலமாக நந்தகுமாருக்கு இந்த வக்கீல் நோட்டீஸை அனுப்பியுள்ளார்.

அன்பில் மகேஷ் தரப்பிலிருந்து அனுப்பப்பட்டுள்ள அந்த வக்கீல் நோட்டீஸில் பின்வரும் அதிரடி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன:

இந்த நோட்டீஸ் கிடைக்கப் பெற்ற 48 மணி நேரத்திற்குள், தன் மீது சுமத்திய ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளுக்காக நந்தகுமார் பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டும்.

பேட்டிகளை நீக்க வேண்டும்: ஊடகங்கள் மற்றும் இணையதளங்களில் அன்பில் மகேஸின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் நந்தகுமார் அளித்த அனைத்து அவதூறு பேட்டிகளையும் உடனடியாக நீக்க (Delete) வேண்டும்.

ரூ.50 கோடி இழப்பீடு: திட்டமிட்டு நற்பெயரைக் கெடுக்க முயன்றதற்காக ரூ.50 கோடி இழப்பீட்டுத் தொகையாக வழங்க வேண்டும்.

இது குறித்துப் பேசிய மூத்த வழக்கறிஞர் பி. வில்சன், "இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வகையில் தமிழக அரசுப் பள்ளிகளை மறுசீரமைப்பு செய்து, அதன் தரத்தை உயர்த்திய பெருமைக்குரியவர் அன்பில் மகேஸ். அத்தகைய நற்பெயர் கொண்ட ஒரு மக்கள் பிரதிநிதி மீது, அரசியல் உள்நோக்கத்தோடு பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு அவரது நன்மதிப்பைக் கெடுக்க நந்தகுமார் முயன்றுள்ளார்" என்று சாடினார்.

குறிப்பிட்டபடி 48 மணி நேரக் கெடுவுக்குள் நந்தகுமாரிடமிருந்து முறையான பதிலோ அல்லது நிபந்தனைகளுக்கான உரிய தீர்வுகளோ வரவில்லை எனில், அடுத்தகட்டமாக அவர் மீது நீதிமன்றத்தில் சட்டப்பூர்வமாக அவதூறு வழக்கு தொடரப்பட்டு, கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அந்த நோட்டீஸில் திட்டவட்டமாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

## வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய


# சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்: கலெக்டர் தகவல்

கிருஷ்ணகிரி, ஜூலை 15

கிருஷ்ணகிரி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் 17.07.2026 வெள்ளிக்கிழமை அன்று காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெற உள்ளது. இந்த வேலைவாய்ப்பு முகாமில் கிருஷ்ணகிரி மற்றும் ஓசூரை சேர்ந்த முன்னணி தனியார்துறை நிறுவனங்கள் கலந்துகொண்டு ஆட்களை தேர்வு செய்யவுள்ளனர். 10ம் வகுப்பு தேர்ச்சி, +2 தேர்ச்சி, பட்டதாரிகள், பொறியியல், ஐடிஐ மற்றும் டிப்ளமோ படித்தவர்கள் என அனைத்து கல்வித் தகுதியினரும் கலந்து கொ ள் ள லா ம் . வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் மூலம் நடத்தப்படும் இவ்வேலைவாய்ப்பு முகாம், வேலைநாடுநர்கள் மற்றும் வேலைளிப்பவர்களுக்கு முற்றிலும் இலவசமாக செயல்படுத்தப்படுகிறது. எனவே தனியார்துறையில் பணிபுரிய ஆர்வமும் மேற்காணும் கல்வித்தகுதியும் உடைய அனைவரும் இந்த வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயனடையலாம்.

தேர்ந்தெடுக்கப்பட்டு இம்முகாமின் மூலம் தனியார்துறையில் பணியமர்த்தம் செய்யப்படும் வேலைநாடுநர்களின் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு எண் இரத்து செய்யப்படமாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

மேலும், விவரங்களுக்கு கிருஷ்ணகிரி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தினை நேரிலோ அல்லது 04343291983 என்ற தொலைபேசி எண்வாயிலாகவோ தொடர்பு கொள்ளலாம் என கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் .ச. தினேஷ் குமார் தெரிவித்துள்ளார்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மாணவர்களுக்கான சிறப்பு குறைதீர் முகாமில் மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி மாணவ, மாணவியர்களுடன் கலந்துறையாடினார். உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலமெடுப்பு) திமுரளி, சமூக நீதித்துறை அலுவலர் சுடலைமணி, முதன்மை கல்வி அலுவலர் மான்விழி உட்பட பலர் உள்ளனர்.



# அஇஅதிமுக மாநகர் மாவட்ட கழக செயலாளர் அறிமுக ஆலோசனை கூட்டம்

திருப்பூர்:ஜூலை15

திருப்பூர் மாநகர் மாவட்ட கழகத்தின் சார்பாக, மாவட்ட கழக அவைத்தலைவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமானவெ.பழனிச்சாமி தலைமையில் நடைபெற்ற திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதி செயல் வீரர்கள் கூட்டம் மற்றும் திருப்பூர்மாந கர் மாவட்ட கழக செயலாளர் வேல்குமார் சாமிநாதன் அறிமுக ஆலோசனை கூட்டத்தில் கோவை புறநகர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஜெயராமன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று கடந்த 6 ஆண்டுகளாக திருப்பூர் மாநகர் மாவட்ட கழக செயலாளராக பணியாற்றிட ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து நிர்வாகிகளுக்கும் தனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்து, கழகத்தின் வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்". அதனை தொடர்ந்து, கழக செய்தி தொடர்பாளர் பேராசியர் கல்யாண சுந்தரம் சிறப்புரையாற்றி னார் "

இந்நிகழ்வில், முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினரும், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக செயலாளர் சிவசாமி, முன்னாள் திருப்பூர் வடக்கு சட்டமன்ற உறுப்பினரும், ஒன்றிய செயலாளருமான கோன். விஜயகுமார் விஜ தென்னம்பாளையம் பகுதி கழக செயலாளரும், மாமன்ற எதிர்க்கட்சித் அன்பகம் தெற்கு மத்திய தலைவருமான திருப்பதி, திருப்பூர் பகுதி கழக செயலாளரும், மாமன்ற எதிர்க்கட்சி கொறடாவுமான கண்ணப்பன், மாநில எம். ஜி.ஆர் மன்ற துணை செயலாளர் . பட்டுலிங்கம், மாநில மகளிரணி இணை செயலாளர் கவிதா குணசேகரன், கழக பொதுக் குழு உறுப்பினர் தம்பி மனோகரன், கொங்குநகர் பகுதிகழக செயலாளர் திரு. பிகேஎம். முத்து, முருங்கப்பாளையம் பகுதி கழக செயலாளர் கண்ணன், கோல்டன் நகர் பகுதி கழக செயலாளர் . ஹரிஹரசுதன், , நல்லூர் பகுதி கழக செயலாளர் . குமார், நெருப்பெரிச்சல் பகுதி கழக செயலாளர் நாச்சிமுத்து, 15வேலம் பாளையம் பகுதி கழக செயலாளர் கண்ணப்பன், புதிய பஸ் நிலையம் பகுதி கழக செயலாளர் கனகராஜ், சிறுபூலுவபட்டி பகுதி கழக செயலாளர் தங்கராஜ் கருவம்பாளையம் பகுதி கழக செயலாளர் சிவளா தினேஷ், மாவட்ட எம்ஜி ஆர் மன்ற செயலாளர் சிட்டி பழனிச்சாமி, மாவட்ட தொழிற்சங்க செயலாளர். கண்ணபிரான், மமகளிர் அணி செயலாளர் . சுந்தராம்பாள், மாவட்ட மாணவரணி செயலாளர் .சதிஷ், மாவட்ட அமைப்பு சாரா ஒட்டுநர்அணி செயலாளர்மார்க்கெட் களுக்சக்திவேல், மாவட் நெசவாளர் அணி செயலாளர் ஜெகநாதன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் பிரேம் குமார், மற்றும் வட்டகழக நிர்வாகிகள், மகளிர் அணியினர் பங்கேற்றனர்.



## கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி சார்பில்

# சுங்கச்சாவடியை அகற்றக் கோரி ஈரோடு மாவட்ட ஆட்சியரிடம் மனு

ஈரோடு ஜூலை 15

தொப்பூர் மேட்டூர் பவானி ரோடு, அம்மா பேட்டையில் அமைந்துள்ள சுங்கசாவடியை அகற்ற கோரி கடந்த ஒரு வருட காலமாக அப்பகுதி மக்கள் தமிழக அரசுக்கு தொடர் கோரிக்கை வைத்து வந்துள்ளனர்.

இந்நிலையில் சுங்கசாவடியில் எந்த வித சாலை வசதியையும் அமைத்து கொடுக்காமல் சுங்கம் வசூல் செய்து வருகின்றனர்.

இதனால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள், வாகனம் ஓட்டிகள், விவசாயிகள், தொழிலாளர்கள் அனைவரும் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

எந்தொரு சாலைகள் விரிவாக்கம் செய்யாமலும் எந்த வசதியும் இல்லாமலும் சுங்கசாவடி வசூலிப்பது தவறான முன்னுதாரணமாக அமைந்து பொதுமக்களுக்கு மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

உடனடியாக மேற்படி உள்ள சுங்கசவாடியை அப்புறபடுத்தி கொடுக்க மாறு அனைத்து பொது மக்கள், வாகனம் ஒட்டிகள், விவசாயிகள், தொழிலாளர்கள் சார்பாக ஈரோடு மாவட்ட ஆட்சியரிடம் அளித்தனர்.

## தொட்டபுரம் ஆஞ்சநேயர் கோவில் சார்பாக

# ஈரோடு நேதாஜி காய்கறி மார்க்கெட்டில் 2000 க்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம்



ஈரோடு ஜூலை 15

ஈரோடு தாளவாடி தலைமலை தொட்டபுரம் ஸ்ரீ ருத்ர ஜெய வீர ஆஞ்சநேயர் திருக்கோவில் சேவா அறக்கட்டளை மற்றும் ஈரோடு தினசரி காய்கறி சந்தை நண்பர்கள் இணைந்து, கடந்த இரண்டு வருடமாக தங்களது சேவையைத் தொடர்ந்துள்ளனர். ஈரோடு நேதாஜி காய்கறி சந்தையில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டில், 19வது மாதமாக அன்னதானம் நடைபெற்றது.

ஆஞ்சநேயர்படத்திற்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு பூஜைகள் நடைபெற்ற பின்பு அன்னதானம் தொடங்கப்பட்டது.

இந்த நிகழ்விற்கு ஸ்ரீ ருத்ர ஜெய வீர ஆஞ்சநேயர் திருக்கோவில் செயலர் ரமேஷ் முன்னிலை வகித்தார். நேதாஜி காய்கறி மார்க்கெட் கடை உரிமையாளர்கள், விவசாயிகள், கோவில் அறங்காவலர்கள், அன்னதான கமிட்டியின் நிர்வாகிகள், மகளிர் அணியினர் கலந்துகொண்டு 2000க்கும் மேற்பட்ட குழந்தைகள், பெரியவர்கள், முதியோர்களுக்கு உணவை வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து, ஸ்ரீ ருத்ர ஜெய வீர ஆஞ்சநேயர் திருக்கோவில் சார்பாக ஈரோடு கொங்கலம்மன் கோவில் வீதியிலும் சுமார் 700 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. மேலும் தலமலை ஆஞ்சநேயர் திருக்கோவிலிலும் அறக்கட்டளை சார்பாக அன்னதானம் வழங்கப்பட்டது.



கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை ஊராட்சி ஒன்றியம், மலுமிச்சம்பட்டி ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், நாற்றங்கால் பண்ணையில், வேம்பு, புளி, நாவல், கொய்யா, நெல்லிக்காய், மாங்கனி உள்ளிட்ட மரக்கன்றுகள் உற்பத்தி செய்யும் பணியினை மாவட்ட கலெக்டர் பவன்குமார் க.கிரியப்பனவர் நேரில் பார்வையிட்டார். இந்த நிகழ்வுகளின் போது, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) சங்கேத் பல்வந்த் வாகே மதுக்கரை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுவாமிநாதன், சந்திரா, உதவி பொறியாளர் கவிதா, உட்பட பலர் உள்ளனர்.

# கூடுதல் மருத்துவக் கட்டிடங்களை திறந்து வைத்து, மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களுக்கான பணி நியமன ஆணை வழங்கும் நிகழ்ச்சி



தேனி, ஜூலை 15

தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் மருத்துவக் கட்டிடங்களை திறந்து வைத்து, மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களுக்கான பணி நியமன ஆணை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், பூதிப்புரம் பேரூராட்சியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் மருத்துவமனை கட்டிடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் காணொளிக் காட்சி மூலம் திறந்து வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது . இவ்விழாவையொட்டி, பூதிப்புரம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் உள்ள புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் மருத்துவமனை கட்டிடத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.வைத்திநாதன், குத்துவிளக்கேற்றி வைத்து பார்வையிட்டார்கள். பின்னர், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று மருத்துவப் பரிசோதனை மையம், மருந்தகப் பிரிவு, ஆய்வகம் உள்ளிட்ட பல்வேறுப் பிரிவுகளை பார்வையிட்டதுடன், அங்கிருந்த பொதுமக்களிடம் சிகிச்சை வழங்கப்படும் விவரம் குறித்தும், கோரிக்கைகள் குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டறிந்தார். தொடர்ந்து, 10 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துப் பெட்டகங்களை வழங்கியதுடன், ஊட்டச்சத்து உணவுகளை முறையாக உட்கொண்டு ஒவ்வொருவரும் உடல் ஆரோக்கியத்துடன் இருந்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார். மேலும், ஆரம்ப சுகாதார நிலையத்தில் பராமரிக்கப்படும் கர்ப்பிணித் தாய்மார்கள் பதிவேடுகளைப் பார்வையிட்டு, அதிலுள்ள தொலைப்பேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டு கர்ப்பிணிப் பெண்ணிடம், மருத்துவப் பரிசோதனைகளை முறையாக மேற்கொள்ளுமாறும், மருத்துவரின் ஆலோசனைப்படி ஊட்டச்சத்து உணவுகளை உட்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.வரதராஜன், நிலைய மருத்துவ அலுவலர் மரு. தண்டபாணி, பேரூராட்சி மன்றத்தலைவர் கவியரசு. செயல் அலுவலர் ராஜேஷ் மற்றும் அரசு அலுவலர்கள், செவிலியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# சேவை பெறும் உரிமைச் சட்டத்தை" அமல்படுத்த கோரிக்கை

திருப்பூர் ஜூலை 15,,

இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் மருத்துவர் நாரணவரே மனீஷ் சங்கர்ராவ் அவர்களிடம் திருப்பூர் நுகர்வோர் நல முன்னேற்ற சங்க தலைவர் சமூக ஆர்வலர் ஈ.பி.அ.சரவணன், நல்லூர் நுகர்வோர் மன்ற தலைவர் நல்லூர் சண்முக சுந்தரம், வேல்முருகன் உள்ளிட்டோர்கள் நேரிடையாக மனு அளித்தனர்.

இதில் இன்னும் எத்தனை காலம் தான் அரசு துறைகளில் எந்த ஒரு சேவை பெறுவதற்கும் கையூட்டையோ, கால தாமதத்தையோ எதிர்கொள்வது...?

இதற்கு முடிவுகட்ட சேவை பெறுவதை உரிமையாக்கவும், குறிப்பிட்ட காலத்திற்குள் சேவை வழங்குவதை அரசு உறுதிப்படுத்துவது கடமையாகும்.

அரசுச் சேவைகளை காலத்தோடு வழங்கவும், நிர்வாக வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யவும் "சேவை பெறும் உரிமைச் சட்டத்தை" உடனடியாக முழுமையாக அமல்படுத்த போர்க்கால அடிப்படையில் விரைவாக தீர்வுகாண வேண்டும்.

சேவை பெறும் உரிமைச் சட்டம் நடைமுறைக்கு வரும் சூழலில், மக்களிடம் கோரிக்கை மனுவை பெறும் அரசு அலுவலர் ஒரு தேதியைக் குறிப்பிட்டு ஒப்புதல் தருவார்.

அந்த குறிப்பிட்ட காலத்திற்குள் சேவை நிறைவேற்றப்படாவிட்டால், 2 மேல் கட்ட முறையீடுகளுக்கு வாய்ப்புள்ளது.

அதன் பிறகு சேவையை நிறைவேற்றத் தவறிய அலுவலர்களுக்கு அபராதக் கட்டணம், அதிகபட்சமாக ரூபாய் 5000 வரை விதிக்கப்படுகிறது.

சாதிச் சான்றிதழ், பட்டா மாறுதல், வாரிசுச் சான்றிதழ், பிறப்பு/இறப்புச் சான்றிதழ் போன்ற ஒவ்வொரு அரசுச் சேவைக்கும் இத்தனை நாட்களுக்குள் வழங்கப்பட வேண்டும் என்ற காலக்கெடு கட்டாயமாக்கப்பட வேண்டும்.

மக்கள் தங்களின் விண்ணப்பங்கள் எந்த அதிகாரியின் வசம், என்ன நிலையில் உள்ளன என்பதைத் தங்குதடையின்றி இணையதளம் மற்றும் குறுஞ்செய்தி வழியாகக் கண்காணிக்கும் வெளிப்படையான வசதி முழுமையாகச் செயல்படுத்தப்பட வேண்டும்.

இந்த விஷயத்தில் தமிழ்நாடு அரசு சிறப்பு கவனம் செலுத்தி, நிர்வாகச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு, இச்சட்டத்தை தமிழகத்தில் முழுமையாக அமல்படுத்த உடனடியாக உரிய தீர்வுகாண வேண்டும்.

எனவே இது அரசு நிர்வாகத்தின் மீதான நம்பகத்தன்மையை பல மடங்கு உயர்த்தும் இந்த நியாயமான கோரிக்கையை ஏற்று, தமிழக மக்களின் அச்சத்தைப் போக்கி, ஒரு சிறப்பான லஞ்சமற்ற, காலதாமத மற்ற மக்கள் நல நிர்வாகத்தை வழங்க ஆவன செய்ய சேவை பெறும் உரிமைச் சட்டத்தை" உடனடியாக முழுமையாக அமல்படுத்த போர்க்கால அடிப்படையில் விரைவாக தீர்வுகாண வேண்டுமென திருப்பூர் நுகர்வோர் நல முன்னேற்ற சங்கம் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறாக அதில் கூறப்பட்டுள்ளது.



# குமரியில் 5 துணை சுகாதார நிலையங்களை தமிழக முதல்வர் திறந்து வைத்தார்: அமைச்சர், கலெக்டர் நன்றி

நாகர்கோவில், ஜூலை.15

தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிகாட்சி வாயிலாக நேற்று14. ம் தேதி கிள்ளியூர் சட்டமன்றத்திற்குட்பட்ட ஆறுதேசம் பகுதியில் ரூ.50 இலட்சம் மதிப்பில்புதியவட்டார பொது சுகாதார அலகு கட்டிடம், புத்தன்துறையில் ரூ.50 இலட்சம் மதிப்பில் துணை சுகாதார நிலையம், கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இராஜாவூரில் ரூ.45 இலட்சம் மதிப்பில் துணை சுகாதார நிலையம், விளவங்கோடு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட உண்ணாமலைகடையில் ரூ.1.50 கோடி மதிப்பில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம், நாகர்கோவில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இராஜாக்கமங்கலத்தில் ரூ.65 இலட்சம் மதிப்பில் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம் என 5 கட்டிடங்களை திறந்து வைத்தார்.

இதைத் தொடர்ந்து குமரி மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், தலைமையில் பத்மநாபபுரம் சட்டமன்ற உறுப்பினர் செல்லசுவாமி முன்னிலையில் சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ் குமார் குத்துவிளக்கேற்றி முதலமைச்சருக்கு அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர். பின்னர் அமைச்சர் கூறியதாவது:

குமரி மாவட்டத்தின் கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்கள் எளிதில் தரமான மருத்துவச் சேவைகளைப் பெறும் வகையில் நவீன வசதிகளுடன் இந்த புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. கன்னியாகுமரி மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, கட்டிடங்களை திறந்து வைத்ததற்கு மாவட்ட பொதுமக்கள் மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் கிராமப்புற மக்களுக்குத் தரமான மருத்துவச் சேவைகள் தங்குதடையின்றி, மிக எளிதாகச் சென்றடைய வழிவகுக்கும். என அமைச்சர் கூறினார்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.நமச்சிவாயம், முஞ்சிறை வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜகுமார், பொறியாளர் பெனிக்ஸ், வட்டார மருத்துவ அலுவலர், மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



## ஈரோடு பேருந்து நிலைய நுழைவாயிலில்

# ஹெல்மெட் அணியாத இருசக்கர வாகன ஓட்டிகள் மீது தீவிர கண்காணிப்பு

ஈரோடு, ஜூலை 15:

ஈரோடு மத்திய பேருந்து நிலைய நுழைவாயில் பகுதியில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தவும், சாலை விபத்துகளைத் தடுக்கும் நோக்கிலும் போக்குவரத்து காவல்துறையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டி.வி. கிரண் ஸ்ருதி அவர்களின் உத்தரவின்பேரில், போக்குவரத்து காவல் ஆய்வாளர் ராமகிருஷ்ணன் தலைமையிலும், உதவி ஆய்வாளர் சண்முக மூர்த்தி முன்னிலையிலும் நடைபெற்ற இந்த சோதனையில், ஹெல்மெட் அணியாமல் இருசக்கர வாகனங்களை இயக்கியவர்கள், ஓட்டுநர் உரிமம், வாகன ஆவணங்கள் இன்றி வந்தவர்கள் உள்ளிட்டோரிடம் தீவிரமாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

விதிமுறைகளை மீறிய வாகன ஓட்டிகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டதுடன், ஹெல்மெட் அணிவதன் அவசியம் குறித்தும், சாலை பாதுகாப்பு விதிகளை கட்டாயம் கடைபிடிக்க வேண்டுமென்றும் காவல்துறையினர்அறிவுறுத்தினர். பொதுமக்களின்உயிர்பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இதுபோன்ற வாகன சோதனைகள் தொடர்ந்து நடைபெறும் என்றும், இருசக்கர வாகன ஓட்டிகள் மற்றும் பின்னால் அமர்ந்து பயணிப்பவர்களும் கட்டாயம் ஹெல்மெட் அணிந்து பயணிக்க வேண்டும் என போக்குவரத்து காவல்துறையினர் தெரிவித்தனர்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை மக்கள் குடும்ப நலத்துறை, மாவட்ட சுகாதார பணிகள் சார்பாக, உலக மக்கள் தொகை தினத்தை (ஜூலை 11) முன்னிட்டு, உலக மக்கள் தொகை தின உறுதிமொழியை மாவட்ட ஆட்சித்தலைவர்.ச.தினேஷ்குமார் துறைசார்ந்த அலுவலர்கள் மற்றும் ஜீவா நர்சிங் கல்லூரி மாணவிகள் எடுத்துக்கொண்டனர். உடன், மாவட்ட வருவாய்அலுவலர்.த.மஞ்சுளா, ஓசூர்சார்ஆட்சியர்.ஆக்ரிதிசேத்தி. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) .முருகேசன், (வளர்ச்சி) .ராமஜெயம், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் .ஷாஜகான், இணை இயக்குநர் (நலப் பணிகள்) மரு. மோகனபானு, துணை இயக்குநர் (குடும்பநலம்) மரு.பாரதி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் படைப்பாளர் பரிசு: மாவட்ட கலெக்டர் தகவல்

நாகர்கோவில், ஜூலை. 15

தமிழக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுச் சங்கத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் சிறந்த எழுத்தாளர்களின் சிறந்த இலக்கிய படைப்புகளில் 11 நபர்களது படைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களது படைப்பினை வெளியிட உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், மதம் மாறிய ஆதிதிராவிடர் இனத்தை சேர்ந்த 9 எழுத்தாளர்கள் மற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் பிரச்சனைகளைப் பற்றி எழுதும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லாத எழுத்தர் ஒருவரும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

இதனை ஊக்குவிக்கும் வண்ணம் இவர்களது சிறந்த இலக்கிய படைப்பினை வெளியிட தலா ரூ.1 லட்சம் வீதம் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படுகிறது. எழுத்தாளர்களுக்கு வயது வரம்பு இல்லை. கதை, கட்டுரை, கவிதை, வரலாறு மற்றும் புதினம் ஆகியவை எதுவாகவும் இருக்கலாம். தமிழ் மொழியிலேயே படைப்பு இருக்க வேண்டும். பிற மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த தமிழ் மொழி படைப்பாகவும் இருக்கலாம். எம்.பில்., பி.எச்.டி., போன்ற படிப்புகளுக்குத் தயாரிக்கப்படும் ஆராய்ச்சிக்கட்டுரைகளுக்குஅவை அரிதான சிறப்புடையதாக இருக்க வேண்டும். படைப்புகள் 90 பக்கங்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும். ஏற்கனவே சந்தையில் வெளியிடப்பட்டுள்ள படைப்புகளை கொண்டு விண்ணப்பித்தல் கூடாது.

ஒரு முறை விருதுக்கு தெரிவு செய்யப்பட்ட எழுத்தாளர் 5 ஆண்டுகளுக்கு பிறகே விண்ணப்பிக்க வேண்டும். படைப்புகளை தேர்ந்தெடுத்தல் குறித்து அரசால் அமைக்கப்பட்டுள்ள வல்லுநர் குழுவின் முடிவே இறுதியானது. இத்திட்டத்தின் கீழ் 2025 – 26 ஆம் ஆண்டிற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் இதற்கான விண்ணப்பங்களை தொடர்புடைய மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகங்களிலும், ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்திலும் வேலை நாட்களில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பிக்க கடைசி நாள்: 31.08.2026. விண்ணப்பதாரர்கள் தங்களது படைப்பினை இரு நகல்களிலும் டிஜிட்டல் முறையிலும், உரிய படிவத்தில்தவறாமல்கைபேசி எண்ணினை குறிப்பிட்டு உரிய காலத்திற்குள் இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை 05 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் அறிவித்துள்ளார்.



## திருவண்ணாமலையில்

# உலக அமைதிக்காக திருவாசக எழுத்து ஞான வேள்வி ஜூலை 25, 26ல் திருவாசக தெய்வீக மாநாடு

கோவை ஜூலை:15

திருவண்ணாமலை திருப்பெருந்துறை அடியார்கள் குழு மற்றும் தடம் பதிக்கும் தளிர்கள் பன்னாட்டு மையம் சார்பில் திருவண்ணாமலையில் மாதவி பன்னீர்செல்வம் மஹாலில் ஜூலை 25 மற்றும் 26 ஆகிய சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் திருவண்ணாமலையில் "திருவாசக தெய்வீக மாநாடு"நடைபெற உள்ளது.

இதனை முன்னிட்டு கோவை காந்திபுரத்தில் தனியார் அரங்கத்தில் திருவாசக தெய்வீக மாநாடு அழைப்பிதழ் வெளியீட்டு விழா நடைபெற்றது.இந்த நிகழ்ச்சியில் சிவ அடியார்கள் கலந்து கொண்டனர்.

இது சார்பாக திருவண்ணாமலை திருப்பெருந்துறை அடியார்கள் குழு தலைவர் சிவக்குமார் பேசுகையில்,திருவாசகம் உலகம் முழுவதும் பரவ வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன், ஜூலை 25 அன்று உலக அமைதிக்காக "திருவாசக எழுத்து ஞான வேள்வி" நடத்தப்படுகிறது.இந்த நிகழ்வில் உலகம் முழுவதும் ஒரே நேரத்தில் 1.20 லட்சத்திற்கும் மேற்பட்டோர் திருவாசகத்தை எழுதி பங்கேற்க உள்ளனர்.

இந்த எழுத்து 14 நாடுகள் மற்றும் இந்தியாவின் பல மாநிலங்கள், 16 கல்லூரிகள்,32 பள்ளிகள்,ரிஷிகேஷ், கேதார்நாத்,பத்ரிநாத்,காசி உள்ளிட்ட புனிதத் தலங்கள் பல்வேறு ஆசிரமங்கள் மற்றும் ஆன்மிக மையங்களில் ஒரே நேரத்தில் நடைபெற உள்ளது.

திருவண்ணாமலையில் நடைபெறும் பிரதான நிகழ்வில் மட்டும் சுமார் 10,000 பேர் அமர்ந்து திருவாசகம் எழுதுவார்கள் என்றும் இரண்டு நாள் மாநாட்டில் 30,000க்கும் மேற்பட்டோர் பங்கேற்பார்கள் என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

பங்கேற்பாளர்களுக்கான தங்குமிடம், உணவு உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.உலக அமைதி,தேச நன்மை மற்றும் அனைத்து உயிரினங்களும் இன்புற்று வாழ வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் நடைபெறும் இந்த திருவாசக எழுத்து ஞான வேள்வி மற்றும் தெய்வீக மாநாட்டில் ஆன்மிக அன்பர்கள், பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் அனைவரும் குடும்பத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் அன்புடன் அழைப்பு விடுத்தனர்.




# தருமபுரி ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

தருமபுரி ஜூலை 15

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள அதியன் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து 607 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட ஆட்சியர் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி அதன்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார். இந்தக் கூட்டத்தில் சாலை வசதி, குடிநீர் வசதி, பேருந்து வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் வேண்டியும், பட்டா வேண்டுதல், சிட்டா பெயர் மாற்றம், புதிய குடும்ப அட்டை வேண்டுதல், வாரிசு சான்றிதழ் ,வேலை வாய்ப்பு, இலவச வீட்டு மனை பட்டா, முதியோர் ஓய்வூதியத்தொகை உள்ளிட்ட இதர உதவித்தொகைகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் குறித்தும் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி தொகைகள், உபகரணங்கள் வேண்டியும் மனுக்கள் பெறப்பட்டன. இந்தக் கூட்டத்தில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறைசார்பில்முதலமைச்சரின்விரிவானகாப்பீட்டு திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கை அவயங்கள் அளவெடுக்கப்பட்டு 21 மாற்றுத்திறனாளிகளுக்குரூ.13.73லட்சம்மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர்சரவணன்வழங்கினார். மேலும் வருவாய் துறையின் சார்பில் இரண்டு நபர்களுக்கு ஓய்வூதியத்திற்கான ஆணைகளை அவர் வழங்கினார். இந்த கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் ஷெர்லி ஏஞ்சலா, மாவட்ட வழங்கள் மற்றும் நுகர்வோர்பாதுகாப்பு அலுவலர் கோவிந்தன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் பண்டரிநாதன் உள்ளிட்ட தொடர்புடைய அரசு துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## வேலூர் மாவட்டம்

# கம்மசமுத்திரத்தில் புதிய துணை சுகாதார நிலையத்தை தமிழக முதல்வர் காணொளி காட்சியில் திறந்து வைத்தார்



வேலூர், ஜூலை 15

வேலூர் மாவட்டம் கணியம்பாடி வட்டாரம் கம்மசமுத்திரம் ஊராட்சியில் ரூபாய் 45 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட துணை சுகாதார நிலைய கட்டிடத்தை தமிழக முதல்வர் சி.ஜோசப் விஜய் சென்னையில் காணொளிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து துணை சுகாதார நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மா.சிவசுப்பிரமணியன் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சுகுமார் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தனர்.

இதில் மாவட்ட சுகாதார அலுவலர் விஜய் சந்திரன், தேசிய சுகாதார இயக்க உதவி திட்ட அலுவலர் மரு.ஆதித்யன், வட்டார சுகாதார மேற்பார்வையாளர் சண்முகசுந்தரம், மாவட்ட சுகாதார நல கல்வியாளர் கங்காதரன், சுகாதார அலுவலரின் நேர்முக உதவியாளர்

இளங்கோ, கம்மவான் பேட்டை மருத்துவ அலுவலர் மரு.துரை, வட்டார மருத்துவ அலுவலர் மரு. அனிதா, சுகாதார ஆய்வாளர் ஏழுமலை மற்றும் ஊராட்சி மன்ற தலைவர் முருகேசன், துணைத்தலைவர்அமுதாகணேஷ், வார்டு உறுப்பினர் தீபக் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்

# விவசாய தண்ணீருக்காக சித்தியை சுத்தியால் அடித்து கொலை செய்த கூலி தொழிலாளியால் பரபரப்பு

தருமபுரி ஜூலை 15



தருமபுரி மாவட்டம் பாலக்கோடு அருகே பொப்பிடி கிராமத்தைச் சேர்ந்த கூலி தொழிலாளி வெங்கடேசன் இவரது மனைவி தனலட்சுமி (வயது40) இவர்களுக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். இவர்களுக்கு சொந்தமாக இரண்டு ஏக்கர் விவசாய நிலம் உள்ளதாகவும், இவருடைய சகோதரர் மாரிமுத்துவின் மகன் செந்தில்அரசு (வயது28) சென்ட்ரிங் கூலி வேலை செய்து வருகிறார்.

இவருக்கும் வெங்கடேசனுக்கும் விவசாய நிலத்திற்கு கிணற்றிலிருந்து தண்ணீர் பாய்ச்சுவது தொடர்பாக அடிக்கடி பிரச்சினை ஏற்பட்டு வந்தது. மீண்டும் தண்ணீர் பாய்ச்சுவது தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டது. அப்போது தனலட்சுமியிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்ட செந்தில்அரசு ஆத்திரத்தில் சென்ட்ரிங் வேலை செய்யபயன்படுத்தும் இரும்பு சுத்தியால் தனலட்சுமியின் தலையில் வேகமாக அடித்துள்ளார். இதில் தனலட்சுமி ரத்த வெள்ளத்தில் கீழே விழுந்தார், இதனை கண்டு அதிர்ச்சியடைந்த அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அவரை பரிசோதித்த மருத்துவர்கள் தலைட்சுமி வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இதையடுத்து உயிரிழந்த தனலட்சுமியின் உடல் பிரேத பரசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. தகவலறிந்த மாரண்டஅள்ளி காவல் துறையினர் இச்சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்து தலைமறைவான செந்தில் அரசை தேடி வருகின்றனர்.




வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள அரசு பொது இ சேவை மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் . பி.எஸ்.லீலா அலெக்ஸ், பார்வையிட்டு ஆய்வு செய்து, பொது மக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்கள். இந்த ஆய்வின் போது வேலூர் வட்டாட்சியர் .பழனி, மாவட்ட மின் மேலாளர் .அரவிந்த் ஆகியோர் உடனிருந்தனர்.

# வியட்நாம் படகு விபத்தில் உயிரிழந்த வினையகுமார் குமார் உடல் வேலூர் வந்தடைந்தது



வேலூர், ஜூலை 15

வியட்நாமில் கடந்த 11ஆம் தேதி நிகழ்ந்த படகு விபத்தில் உயிரிழந்த தமிழகத்தைச் சேர்ந்த 10 சுற்றுலாப் பயணிகளின் உடல்களும் இன்று (ஜூலை 14) காலை விமானம் மூலம் தமிழகத்திற்குக் கொண்டு வரப்பட்டன.

வேலூர் மாவட்டம் சைதாப்பேட்டை கன்னிகா பரமேஸ்வரி தெருவை சேர்ந்த வினையகுமார் (48) என்பவரும் இந்த விபத்தில் உயிரிழந்தார்

விமானம் மூலமாக சென்னை கொண்டு வரப்பட்ட அவருடைய உடல் அங்கிருந்து வேலூரில் உள்ள அவருடைய இல்லத்திற்கு கொண்டுவரப்பட்டது உடலைக் கண்ட அவரது மனைவி , குழந்தை, மற்றும் உறவினர்கள் கதறி அழுதது பார்ப்போர் மனதை உலுக்கியது

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.